# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1992 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

---

*[1992, ஆகஸ்ட் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.**

---

*1992, செத்தெம்பர் மாதம் 04 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

**இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.**

---

**கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.**

விலை : சதம் 90 — தபாற் செலவு : ரூபா 1·00

# 1992 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டம்

[1992, ஆகஸ்ட் மாதம் 31 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 27/91
3089

## மோட்டார் வாகனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கை அரசாங்கத்தின் கொள்கையானது — பெருந்தெருவை உபயோகிப்பவர்களின் பாதுகாப்பின் அக்கறைகளுக்காக வாகனத்தின் உறுதிநிலைக்கான அத்துடன் சாரதியின் தகைமைக்கான குறைந்தபட்ச நியமங்களை விதித்துரைத்தலானது தேவையானதாகவிருப்பதனால், முன்னுரை.

(அ) ஏதேனும் பெருந்தெருவில் உபயோகிப்பதற்கு அனுமதிக்கப்படும் ஒவ்வொரு வாகனமும்; அத்துடன்

(ஆ) அத்தகைய பெருந்தெருவில் அத்தகைய ஏதேனும் வாகனத்தை செலுத்துவதற்கு அல்லது வாகனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதற்கு அனுமதிக்கப்படும் ஒவ்வொரு ஆளும்,

அதன் சார்பாகச் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய குறைந்தபட்ச உறுதிநிலைக்கான அல்லது தகைமைக்கான நியமங்களைக் கொண்டிருக்கவோ அல்லது அவற்றிற்கு இணங்கியிருக்கவோ வேண்டுமென்பதனை உறுதிப்படுத்துவதற்கானதாதலால்;

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க, மோட்டார் வாகன (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. பின்வரும் புதிய பிரிவானது (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 203 ஆம் அத்தியாயமான மோட்டார் வாகனச் சட்டத்தின் 124 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அச்சட்டத்தின் 124 அ எனும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:— 203 ஆம் அத்தியாயத்தில் 124 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"சாரதி உரிம நிதியம்.

124 அ. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (இதனகத்துப் பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "சாரதி உரிம நிதியம்" என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) சாரதி உரிம அட்டைகளை வழங்குவதற்கான செலவுத்தொகையாக, அமைச்சரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறான 124, 126 அ, 128 அல்லது 231 ஆம் பிரிவுகளின்கீழ் அறவிடப்படும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்தின் அத்தகைய பாகமானது நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

2—டீ 022683—1,195 (92/09)

(3) சாரதி உரிம அட்டைகளின் வழங்குகை தொடர்பாகச் செலுத்தப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத் தொகையும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) நிதியத்தில் எஞ்சியிருக்கும் மேன்மிகை எதுவும், வீதிப் பாதுகாப்பினை மேம்படுத்தும் அத்துடன் விபத்துக்களைத் தடுக்கும் தேவையினைக் கருத்திற் கொண்டு அமைச்சரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.

(5) நிதியத்தின் திருவாகத்திற்கு ஆணையாளர் பொறுப்பானவராகவிருத்தல் வேண்டும்.

(6) நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 125 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(1) சாரதி உரிமம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அமைந்திருத்தல் வேண்டும். சாரதி உரிமமானது ஒரு அட்டை வடிவத்தில் வழங்கப்படுமிடத்து, அத்தகைய உரிமமானது விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய விவரணத்திலான புறக் குறிப்புப்படிவத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அத்தகைய புறக்குறிப்புப் படிவமானது அதனுடன் இணைந்திருக்கும் உரிமத்தின் ஓர் பாகமாக அமைதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவானது "இரண்டாம் மூன்றாம் உட்பிரிவுகளின்" என்னும் சொல்லமைப்புகளுக்குப் பதிலாக "இரண்டாம் மூன்றாம் உட்பிரிவுகளின் அத்துடன் பிரிவு 126 அ என்பதன்" என்னும் சொல்லமைப்புக்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 126 அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 126 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் அது அச் சட்டவாக்கத்தின் 126 அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"சாரதி உரிமங்களை மாற்றீடு செய்தல்.

126 அ. (1) இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதற்கும் முரணானது எது எப்படியிருப்பினும், அமைச்சரானவர், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், இச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட, கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொடரிலக்கத்தினைக்கொண்டுள்ள சாரதி உரிமம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான ஒரு அட்டை வடிவிலான சாரதி உரிமம் ஒன்றினால் மாற்றீடு செய்யப்படுதல் வேண்டுமென வெளிப்படுத்தலாமென்பதுடன், அத்தகைய உரிமமானது குறித்துரைக்கப்பட்டதோர் காலப்பகுதிக்கு அல்லது வைத்திருப்பவரின் ஆயுட்காலத்திற்கு வழங்கப்பட்டதென்பது எப்படியிருப்பினும், அவ்வாறு வழங்கப்பட்ட முதற்குறிப்பிட்ட உரிமத்தை செல்லுபடியற்றதாக்குவதற்குப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய தேதியையும் நிர்ணயிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்று ஆக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள தொடரிலக்கத்தைக்கொண்ட சாரதி உரிமத்தை வைத்திருக்கும் ஒவ்வோர் ஆளும், அத்தகைய உரிமத்தை செல்லுபடியற்றதாக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அத்தகைய உரிமத்தை அட்டை வடிவிலான சாரதி உரிமமொன்றினால் மாற்றீடு செய்வதற்கென ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட ஒவ்வோர் விண்ணபத்துடனும் பின்வருவன இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :—

(அ) சாரதி உரிமத்தினை மாற்றீடு செய்வது தொடர்பிலான விதித்துரைக்கப்பட்ட கட்டணம்;

(ஆ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அளவினைக்கொண்டதும் விண்ணப்பத் தேதிக்கு முன்னர் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலவெல்லைக்குள் எடுக்கப்பட்டதுமான விண்ணப்பதாரரின் இரண்டு புகைப்படப் பிரதிகள்; அத்துடன்

(இ) மாற்றீடு செய்வதற்குக் கோரப்படுகின்ற சாரதி உரிமம்.

(4) இப்பிரிவின்கீழ் சாரதி உரிமமொன்றை மாற்றீடு செய்வதற்கான விண்ணப்பமொன்று செய்யப்படு மிடத்து ஆணையாளரானவர், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் ஒவ்வோர் ஆளுக்கும், விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான தற் காலிக சாரதி உரிமமொன்றினை வழங்குதல் வேண் டும். அத்தகைய தற்காலிக சாரதி உரிமமானது இப் பிரிவின்கீழ் அத்தகைய ஆளுக்கு அட்டை வடிவிலான சாரதி உரிமம் ஒன்று வழங்கப்படும்வரை செல்லுபடி யானதாகவிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 128 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்பு வாச கத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"ஆயின் எவ்வாறாயினும், மோட்டார் வாகனங்களின் வேறு ஏதே னும் வகுப்பு அல்லது வகுப்புகளுக்கான சாரதி உரிமமொன்றின் செல்லுபடியாந்தன்மையினை நீடித்தலானது, மோட்டார் வாகனங்க ளின் அத்தகைய வகுப்பு அல்லது வகுப்புகளை மேவுகின்ற ஒரு புதிய சாரதி உரிமமொன்றை வழங்குதல் மூலமாக இருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 129 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "கூறப்பட்டாலன்றி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கூறப்பட்டாலன்றி, - அத்துடன் அட்டை வடிவில் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றின் விட யத்தில் விடயத்திற்கேற்ப அத்தகைய சாரதி உரிமமானது மோட்டார் கோச்சுகள், லொறிகள் அல்லது மோட்டார் முச் சக்கர வான்கள் ஆகியவற்றிற்குச் செல்லுபடியுடையதாக வழங்கப்பட்டிருந்தாலன்றி," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "செல்லுபடியுடையதெனக் கூறப்படுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "செல்லு படியுடையதெனக் கூறப்படுதல் அல்லது செல்லுபடியுடையதாக வழங்கப்படுதல் ஆகாது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் —

(i) அதன் (அ) என்னும் பந்தியில், "செல்லுபடியானதெனக் கூறப்படவேண்டுமென்ற" என்னும் சொற்களுக்குப் பதி லாக "விடயத்திற்கேற்ப செல்லுபடியானதாகக் கூறப் படவேண்டுமென்ற அல்லது செல்லுபடியானதாக வழங் கப்படவேண்டுமென்ற" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்குப் பதிலாக பின் வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) உரிமமானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப் பட்ட பதிவீட்டினால் மோட்டார் கோச்சுகள், லொறிகள் அல்லது மோட்டார் முச்சக்கர வான் கள் ஆகியவற்றிற்குச் செல்லுபடியானதெனக் கூறப்பட்டுள்ளவிடத்து அல்லது செல்லுபடியான தாக வழங்கப்பட்டுள்ளவிடத்து, ஆணையாளரான வர், விடயத்திற்கேற்ப அத்தகைய உரிமமானது அல்லது பதிவீடானது இல்லாததாக்கப்படுதல் வேண்டுமென அல்லது இடைநிறுத்தப்படுதல் வேண்டுமெனக் கட்டளையிடலாமென்பதுடன், அதற்கிணங்க அத்தகைய உரிமமானது அல்லது பதிவீடானது ஆணையாளரினால் இல்லாதாக்கப் படலாம் அல்லது இடைநிறுத்தப்படலாம்;".

(ஈ) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் சாரதி உரிமத்தின் மீது" என்னும் சொற்களுக்கும் அத்துடன் "விண்ணப்பம் செய் யப்பட்டதன்மேல்" என்னும் சொற்களுக்கும் பதிலாக, "வழங் கப்பட்ட ஏதேனும் சாரதி உரிமமானது அல்லது ஏதேனும் சாரதி உரிமத்தின்மீது" என்னும் சொற்களையும் அத்துடன் "விண்ணப்பம் செய்யப்பட்டதன் மேல் புதிய உரிமமொன்றை வழங்கலாம் அல்லது" என்னும் சொற்களையும் முறையே இடுவ தன் மூலமும்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 133 அ என்னும் பிரிவானது அப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்பு வாசகத்தினைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின் றது :—

முதன்மைச் சட்டவாக்கத் தின் 133 அ என்னும் பிரி வைத் திருத் துதல்.

"ஆயின் எவ்வாறாயினும் ஓர் அட்டை வடிவத்தில் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றின் விடயத்தில் அத்தகைய பதிவானது, 125 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட புறக்குறிப்புப் படிவத்தில் செய்யப் படலாமென்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட பதிவொன்று இச்சட் டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய சாரதி உரிமத்தின்மீது செய் யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 136 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் இறுதியில் பின்வரும் காப்பு வாச கத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத் தின் 136 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆயின் எவ்வாறாயினும் ஓர் அட்டை வடிவத்தில் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றின் விடயத்தில் அத்தகைய புறக்குறிப்பானது, 125 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட புறக்குறிப்புப் படிவத்தில் செய்யப்படலாமென்பதுடன், அவ்வாறு செய்யப்பட்ட புறக்குறிப் பொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தகைய சாரதி உரிமத்தின்மீது செய்யப்பட்டதாகக் கருதப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 231 ஆம் பிரிவைத் திருத்துதல்

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 231 ஆம் பிரிவானது அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இறுதியில் பின்வரும் காப்பு வாசகத்தைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"ஆயின் ஒரு அட்டை வடிவத்தில் வழங்கப்பட்டதான சாரதி உரிமத்தின் ஏதேனும் இணைப்பிரதியின் விடயத்தில் அத்தகைய புறக்குறிப்புக்கள் அல்லது பதிவுகள் ஆணையாளரினால், 125 ஆம் பிரிவின் கீழ் விதித்துரைக்கப்பட்ட புறக்குறிப்புப் படிவத்தில் செய்யப்படலாம்".

குறித்த சில உரிமங்கள் செல்லுபடியானதாக விருத்தல் வேண்டும் என்பது.

11. (1) மோட்டார் வாகனச் சட்டத்தில் அடங்கியுள்ள ஏதேனும் ஏற்பாட்டிற்கு முரணானது எது எப்படியிருப்பினும் —

(அ) மோட்டார் வாகனச் சட்டத்தின் 125 ஆம் பிரிவின்கீழ் 1989, மே 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரும் அத்துடன் 1990, ஏப்ரல் 4 ஆம் தேதிக்கு முன்னரும் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட அட்டை வடிவிலான சாரதி உரிமம் ஒவ்வொன்றும்; அத்துடன்

(ஆ) மோட்டார் வாகனச் சட்டத்தின் 125 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட சாரதி உரிமமொன்றை மாற்றீடு செய்வதில் 1989, மே 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னரும் அத்துடன் 1990, யூலை 13 ஆம் தேதிக்கு முன்னரும் வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட அட்டை வடிவிலான சாரதி உரிமம் ஒவ்வொன்றும்,

அத்தகைய உரிமமானது விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்கப்படவில்லை அல்லது அத்தகைய உரிமத்தை மாற்றீடு செய்வதற்குத் தத்துவமளிப்பதற்கான எழுத்திலான சட்டமெதுவும் இருக்கவில்லை என்னும் நிகழ்வின் காரணத்தினால் மட்டும் செல்லுபடியற்றதாகவிருத்தலோ அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலோ ஆகாது என்பதுடன், மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் முறையாக வழங்கப்பட்ட அல்லது மாற்றீடு செய்யப்பட்ட உரிமம் ஒன்றாகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள அத்தகைய உரிமம் ஒவ்வொன்றையும் வழங்குதல் தொடர்பில் ஆணையாளரினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் எல்லாம், மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செல்லுபடியாகும் விதத்தில் அறவிடப்பட்டதாகவும் அத்துடன் அறவிடப்பட்டிருந்ததென்றும் கருதப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னர் மோட்டார் வாகனச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அட்டை வடிவிலான சாரதி உரிமம் ஒன்றை வைத்திருக்கின்ற ஒவ்வொருவருக்கும் அவருக்குப் புறக் குறிப்புப் படிவம் ஒன்று வழங்கப்பட்டிருக்காதிருந்தால், மோட்டார் வாகனச் சட்டத்தின் 125 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட புறக் குறிப்புப் படிவம் வழங்கப்படுதல் வேண்டும்.

**ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.**

12. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.